# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 04 வியாழக்கிழமை 20.07.2023 கதிர் 33



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# தமிழர்களை ஏமாற்றும் ரணில் ஒருபோதும் தீர்வு தரமாட்டார்!

### சஜித் பிரேமதாஸ கூறுகின்றார்



"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார். அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு தரமாட்டார்!", என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்கள் நடத்திய சந்திப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

ராஜபக்சக்கள் போல் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களை ஏமாற்றுகின்றார். அவரை நம்பி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பேச்சுக்குச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில்தான் தமிழ் மக் கள் விரும்பும் தீர்வை - இந்த நாட்டின் மக்கள் ஒருமித்து விரும்பும் தீர்வைப் பெறமுடியும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியை நிறுவுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும், என்றும் அவர் குறிப்பிட்டார்.

## குறுக்குவழியில் தீர்வை பெறுவதற்கு முயலாதீர்!

### பந்துல குணவர்த்தன

தாங்கள் விரும்பும் தீர்வை ஜனாதிபதியிடம் குறுக்குவழியில் தட்டிப்பறிக்கலாம் என்று சம்பந்தன் தலைமையிலான குழுவினர் முயல்கின்றனர், என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், இந்தியாவை வைத்து இலங்கையை மிரட்டலாம் எனச் சம்பந்தன் குழுவினர் எண்ணுகின்றனர், என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை இறைமையுள்ள நாடு. எமக்கென்று ஒரு ஜனாதிபதி உள்ளார். அரசு உண்டு. பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான நாடாளுமன்றமே முடிவு செய்யும், என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார்.

## ராஜபக்சக்கள் போல் ரணிலும் எம்மை ஏமாற்ற இடமளியோம்!

### இரா.சம்பந்தன் உறுதி!



ராஜபக்சக்கள் எம்மை ஏமாற்றியது போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எம்மை ஏமாற்றலாம் என்று தப்புக்கணக்குப் போடுகின்றார். இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தமிழர் நலனில் அதிக சிரத்தையுடன் செயற்படுகின்றன என்பதை ரணில் விக்கிரமசிங்க உணர வேண்டும், என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் 2

## 13ஆம் திருத்தத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்! – அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 20

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சில கட்சிகளும் சிவில் அமைப்புகளும் 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என நேரடியாகவும் மறைமுகமாகவும் கடிதம் எழுதி உள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன.

35 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் 13ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், தனித்துவம் கொண்ட தேசிய இனமாக தமது தேசத்தில் சுயநிர்ணய உரிமையோடு வாழ்வதற்கான போராட்டம் சர்வதேச சமூகம் வியக்கும் அளவில் முன்னெடுக்கப்பட்டது.

ஒற்றை ஆட்சியின் கீழ் சுதந்திரமாக வாழ முடியாது. எமக்கான சுயாட்சி இருக்க வேண்டும் எனும் திடமான அரசியல் சிந்தனையோடு கட்டமைக்கப்பட்ட வடிவிலே போரியல் ஒழுக்கத்துடன் விடுதலைச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களுக்கு எதிராகவும், உறவுகள் காணாமலாக்கப்பட்டமை, காணிகள் அபகரிக்கப்பட்டமை, அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் இருக்கின்றமை என்பவற்றிற்கு நியாயமான நீதியினைப் பெற்றுத் தருமாறு கோரி, வடக்கு கிழக்கு மக்கள் இன்றும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், என்று அருட்தந்தை மா.சத்திவேல் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி பாதீட்டைத் தாக்கல் செய்ய உத்தரவு!

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபடும்போது அதற்கான பாதீட்டைத் தாக்கல் செய்யுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிபதி ரி. பிரதீபன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் இன்றைய வழக்கு விசாரணையின்போது, தொல்பொருள் திணைக்களத்தினர் நீதிமன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

சட்டவைத்திய அதிகாரி வாசுதேவவினால் புதைகுழி அகழ்வுக்கான செலவு குறித்த உத்தேசப் பாதீடு தாக்கல் செய்யப்பட்டது.

அகழ்வுப் பணியை மேற்கொள்ள, யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் புஷ்பரட்ணம், ராஜ்சோமுதேவா ஆகியோரை நீதிமன்றம் அழைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இலங்கைக்கு வழங்கிய ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை நான்காண்டுகளுக்கு நீடிப்பு

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மேலும் 4 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐரோப்பிய ஆணைக்குழு நேற்றைய தினம் தீர்மானம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த வரிச்சலுகை இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ள நிலையில் இந்தக் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கால நீடிப்பின்படி, எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு வரை ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய முறைமையில் எவ்வித மாற்றங்களும் இன்றி, ஐரோப்பிய ஒன்றியத்தினால் பின்பற்றப்படும் 27 சர்வதேச உடன்படிக்கைகளின் கீழ், இந்த வரிச்சலுகை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இந்தியாவிற்குப் புறப்பட்டார் ரணில்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வெளியுறவுத் தொடர்புகளின் 75 ஆண்டு பூர்த்தியையொட்டி இருதரப்பு உறவுகளை மேம்படுத்தவும், பரஸ்பர நலன்களை ஆராயவும் இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உயர் அதிகாரிகளுடன் ரணில் விக்ரமசிங்க பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், சிரேஷ்ட 2

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்




## இறந்தவரின் பட்டம் தாயாரிடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியாப் பல்கலைக் கழகத்தை) சேர்ந்த திசாநாயக முதியன்சேலாகே ஹஷான் சகார திசாநாயக என்பவர் பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமானிப் பட்டத்துக்கு உரியவராக்கப்பட்ட பின்னர் உயிருடன் இல்லாததால், இன்று இடம்பெற்ற 37 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் அவரது தாயாரிடம் பட்டம் கையளிக்கப்பட்டது.

## டெலிகொம் நிறுவன தலைவர் பதவி நீக்கம்



ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து பணிப்பாளர்கள் சபை தன்னை நீக்கியுள்ளதாக ரொஹான் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இன்று கூடிய ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## எரிபொருள் ஒதுக்கீடு மேலும் அதிகரிக்கப்படும் - காஞ்சன



எரிபொருள் ஒதுக்கீடு அடுத்த மாதம் மேலும் அதிகரிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இது தொடர்பாகக் கூட்டம் ஒன்று நடைபெற்றதாகவும், அந்தக் கூட்டத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் அடுத்த ஆறு மாதங்களுக்கான எரிபொருள் சேமிப்புத் திட்டங்கள் மற்றும் விநியோகம் ஆகியவை மீளாய்வு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எரிபொருள் இறக்குமதித் திட்டங்கள், சுத்திகரிப்புச் செயற்பாடுகள், சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள், க்யூ ஆர் ஒதுக்கீடுகளின் சேமிப்புத் திறன், தானியக்கமாக்கல், விநியோகம் மற்றும் எரிபொருள் நிலையங்களுடனான ஒப்பந்தங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது, என்றும் எனவே, உரிய மதிப்பீடுகளின் முடிவில், தற்போதுள்ள எரிபொருள் ஒதுக்கீடு ஒகஸ்ட் மாதத்தில் அதிகரிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்ட ஊடகவியலாளர் கனேடிய உயர்ஸ்தானிகரிடம் நேரில் முறையீடு



குருந்தூர்மலையில் இடம்பெற்ற அத்துமீறல் கள் தொடர்பில் செய்தி சேககரிக்கச் சென்ற போது ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டிருந்தார்.

இது தொடர்பாக, இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் நேற்று முல்லைத்தீவிற்கு பயணம் மேற்கொண்டிருந்தபோது அவர் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் கடந்த14 ஆம் திகதி இடம்பெற்ற வழிபாட்டின்போது , அங்கு செய்தி சேகரிப்பிற்காகச் சென்றிருந்த ஊடகவியலாளருக்கு பொலிஸாரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

பொலிஸாரின் அச்சுறுத்தல் செயற்பாடு தொடர்பில் கடந்த 17 ஆம் திகதியன்று மனித உரிமை ஆணைக் குழுவில் அவர் முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவு ஆணைக்குழு உறுப்பினராக ஊடகவியலாளர் ஹூதா உமர் நியமனம்



சிரேஷ்ட ஊடகவியலாளரும், எழுத்தாளருமான யூ.எல். நூருல் /ஹுதா, கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை உறுப்பினராக மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் வைத்து இந்த நியமனம் இன்று வழங்கிவைக்கப்பட்டது. கிழக்கின் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்களில் ஒருவரான நூருல் /ஹுதா, ஆய்வு, விமர்சன, விவரணத் தொடர் கட்டுரைகளையும் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவரும் ஒருவராவார்.

அல் - மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்காவின் தவிசாளர், கிழக்கு மாகாண கணினி தொடர்பாடல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளர், சிலோன் மீடியா போரம் பொருளாளர் பதவிகள் உட்பட பல்வேறு பொது அமைப்புக்களின் பிரதானியாகவும், முக்கிய பதவி நிலை உத்தியோகத்தராகவும் இருந்துவரும் இவர், சிறந்த மேடைப் பேச்சாளராகவும் திகழ்கிறார்.

## ராஜபக்சக்கள் போல் ரணிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய சந்திப்புத் தொடர்பாக அவர் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் செல்லும் முன்னர் நேற்றுமுன்தினம் சந்திப்பை நடத்தியது எங்களையும் சர்வதேசத்தையும் சமாளிப்பதற்கே. எனினும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு வேண்டும் என்பதில் நாம் உறுதியாக நிற்கின்றோம்.

முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு அனைத்துக் கட்சிகளும் இணங்கினால்தான் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தலாம், என்று ரணில் விக்கிரமசிங்க கூறும் காரணத்தை ஒரு போதும் ஏற்க முடியாது. அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலத்துடனேயே அவர் பதவியில் இருக்கின்றார். எனவே, அவர் நினைத்தால் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாம் கோரும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க முடியும்.

நாம் எமது நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் மூலம் அனுப்பியுள்ளோம். புதுடில்லியில் ரணில் விக்கிரமசிங்க அவரைச் சந்திக்கும்போது, இந்தியப் பிரதமர் எமது நிலைப்பாட்டை வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கின்றோம், என்று அவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவிற்குப் புறப்பட்டார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச உத்தியோகத்தரான சாந்தனி விஜேவர்தன, பதில் செயலாளராக இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலாளர் பதவிக்கு பெண் ஒருவர் நியமிக்கப்பட்டது இதுவே வரலாற்றில் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு நினைவு



மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசிதம்பரம் அவர்களின் நூற்றாண்டு நினைவுதின நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்திலும் நெல்லியடியில் அமைந்துள்ள அவரது சிலையடியிலும் இடம்பெற்றன.

இதன்போது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு உயர்கல்விக்கான புலமைப் பரிசல்களும் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முருகேசு சிவசிதம்பரம் இலங்கைத் தமிழ் அரசியலில் நீண்ட காலம் செயற்பட்டவர். அவர் ஒரு வழக்கறிஞருமாவார். நாடாளுமன்றத் துணைச் சபாநாயகராகவும் 1968 முதல் 1970 வரை அவர் பணியாற்றினார்.

நடைபெற்ற நினைவேந்தலில் சிவசிதம்பரம் அவர்களின் குடும்பத்தினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சென்னை உச்ச நீதிமன்ற சட்டத்தரணி கோபிநாத் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மதிவாணன், பேராசிரியர் தேவராஜ் மற்றும் ஊர்மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கொழும்பின் முக்கிய பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்த தடை விதிப்பு

கொழும்பின் முக்கிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மாளிகாவத்தை பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய மாளிகாகந்த நீதவான் நீதிமன்றினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பு டீன்ஸ் வீதி, வைத்தியசாலைச் சதுக்கம் உள்ளிட்ட வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இன்று முற்பகல் 8.30 முதல் நாளை முற்பகல் 8.30 வரையில் குறித்த பகுதிகளில் ஆர்பாட்டங்களை மேற்கொள்ள இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (க)

## அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தில் இஸ்லாமிய புது வருட நிழ்வு இடம்பெற்றது



(நவாஸ்)

அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தில் இஸ்லாமிய புது வருட நிகழ்வு பிரதேச செயலாளர் எம் ஏ சி. அகமது சாபிர் தலைமையில் வெகு விமர்சியாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கலை நிகழ்ச்சிகள் மற்றும் வினா விடைப் போட்டிகள் இடம்பெற்று அதற்கான பரிசுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உதவி பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், கணக்காளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர்கள் உட்பட பல பிரதேச செயலக உத்தியோதர்களும் கலந்து சிறப்பித்தனர்.



# அல்ஜீரியாவில் பஸ் - கார் விபத்து 32 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்



அல்ஜீரியாவில் பஸ் - கார் இரண்டும் மோதி ஏற்பட்ட விபத்தில் 32 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவின் டமன்ராசெட் மாகாணச் சாலையில் பயணி-களை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று, அதிகாலையில் அடோல் கிராமச்சாலையில் சென்றபோது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்தது.

இதனால் சாலையில் முன்னே சென்று கொண்டிருந்த கார் மீது மோதி விபத்-துக்குள்ளானது.

மோதிய வேகத்தில் பஸ் தலைகுப்புறக் கவிழ்ந்து தீப்பிடித்து எரிய தொடங்கியுள்ளது. பஸ்சிற்குள் இருந்த பயணிகள் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

இந்தக் கோர விபத்தில் 32 பயணிகள் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட 9 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



# இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமையைப் பாதுகாத்திடுக!

பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்

இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமையைப் பாதுகாத்திட வேண்டுமெனக் கோரி, பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

2 நாள் பயணமாக இன்று இந்தியா வந்துள்ள இலங்கை ஜனாதிபதியிடம் மீனவர்கள் விவகாரம் தொடர்பாக வலியுறுத்த வேண்டுமென பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை




உலக நாடுகளின் பொருளாதாரத் தடைகளையும் எதிர்ப்புகளையும் மீறி, வட கொரியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனையை நடத்தி வருகிறது. இதனால், கொரிய தீபக-ற்பத்தில் போர்ப் பதட்டம் நீடிக்கிறது.

இந்த நிலையில், வடகொரியா தனது கிழக்குக் கடற்கரை-ரயில் இருந்து 2 குறுகிய தூர பொலிஸ்டிக் ஏவுகணைகளைக் கடலில் செலுத்திச் சோதனை நடத்தியிருப்பதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சர் யாசுகாசு யமடா கூறுகையில், “நேற்று அதிகாலை மூன்றரை மணி அளவில் வடகொரிய ராணுவம் 2 குறுகிய தூர பொலிஸ்டிக் ஏவுகணைகளை பியாங்காங்கில் இருந்து சோதித்தது.

அவை 550 கி.மீ தூரம் தள்ளி கொரிய தீபகற்ப கடலில் விழுந்தன. மேலும் அவை அணு ஆயுதங்கள் தாக்கி செல்லும் வல்லைமை படைத்தவை என கருதப்படுகின்றன”, என்றார்.

அமெரிக்கப் படைகளுடன் இணைந்து தென் கொர-ியா போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தென் கொரியாவுக்கு ஆதரவாக அணு ஆயுதம் தாங்கிய போர்க் கப்பல் ஒன்றை தென்கொரியத் துறைமுக நகரமான புசானில் அமெரிக்கா நிறுத்தியுள்ளது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே வட கொர-ியா ஏவுகணைச் சோதனையை நடத்தியிருக்கலாம் என கருதப்படுகிறது.

# கொலம்பியாவில் சிறியரக விமானமொன்று விழுந்து விபத்து- 5 அரசியல்வாதிகள் பலி!



மத்திய கொலம்பியாவில் சிறிய ரக விமானம் விபத்துக்குள்ளானதில் ஐந்து அரசியல்வாதிகளும் ஒரு விமானியுமாக 6 பேர் நேற்று உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த ஐந்து பேரும் முன்னாள் ஜனாதிபதி அல்வாரோ யூரிபின் வலதுசாரி சென்ட்ரோ டெமக்ராட்டிகோவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

அவர்கள் போயாகா துறையில் சான் லூயிஸ் டி காசினோ என்ற பகுதியில் சிறியரக விமானத்தில் பயணித்துக்கொண்டிருந்தபோது விமானம் விபத் துக்குள்ளானதாக சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

அந்த விமானம் விலாவிசென்சியோவில் இருந்து பொகோடாவிற்கு கட்சிக் கூட்டத்திற்காகச் சென்று கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இடதுசாரித் தலைவர் குஸ்டாவோ பெட்ரோ தனது டுவிட்டர் பக்கத்தில் இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

# மன்னர் சார்ல்ஸ் பெயரில் கடவுச்சீட்டு இங்கிலாந்தில் இந்த வாரம் அறிமுகம்




இங்கிலாந்தில் புதிதாக மன்னராக பதவியேற்றுள்ள 3ஆம் சார்ல்ஸ் பெயரில் புதிய கடவுச்சீட்டு அறிமுகமாகவுள்ளது.

இங்கிலாந்தின் ராணியாக இருந்த இரண்டாம் எலிசபெத் உடல் நலக் குறைவு காரணமாக கடந்த ஆண்டு செப்டம்பரில் காலமானார்.

1952 ஆம் ஆண்டு பதவியேற்ற ராணி எலிசபெத், சுமார் 70 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். ராணியின் மறைவுக்கு பின் அவரது மூத்த மகனான 3ஆம் சார்ல்ஸ் அரசராகப் பதவியேற்றார்.

இங்கிலாந்தில் வரலாற்று ரீதியாக மன்னர் அல்லது அரசியின் பெயரில்தான் கடவுச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், முதல் முறையாக 3ஆம் சார்ல்ஸ் மன்னர் பெயரில் கடவுச்சீட்டு வழங்கப்படும் என இங்கிலாந்து அறிவித்துள்ளது.

இது குறித்து இங்கிலாந்து உள்துறை அமைச்சர் சுவெல்லா பிரேவ்மன் கூறுகையில், “ராணியின் பெயரில் வழங்கப்பட்டு வந்த கடவுச்சீட்டைத்தான் பெரும்பாலான மக்கள் பார்த்துள்ளனர். வரலாற்றில் முதல்முறையாக 70 ஆண்டுகளுக்கு பின் மன்னரின் பெயரில் இந்த வாரம் கடவுச்சீட்டு வழங்கப்படவுள்ளது” என்றார்.

# நுண்ணறிவு நுட்பத்திற்கு கடிவாளம் தேவை!

## ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரஸ்



ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தால் உலகம் எதிர்கொண்டுள்ள சாதக, பாதகங்கள் தொடர்பான முதல் ஆலோசனைக் கூட்டத்தை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை நடத்தியுள்ளது.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் சாதக, பாதகங்கள் சர்வதேச அளவில் விவாதத்தை ஏற்படுத்தி வரும் நிலையில், இது தொடர்பான ஆலோசனை கூட்டம் ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பமானது, உலக அமைதி மற்றும் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்துமா?, என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரஸ், பிரித்தானியாவின் செயற்கை நுண்ணறிவு நிபுணர் ஜக் க்ளார்க் மற்றும் சீனா, பிரித்தானிய ஆராய்ச்சி மையத்தின் இணை இயக்குனர் ஷெங் யி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

செயற்கை நுண்ணறிவு நுட்பத்திற்கு கடிவாளமிட்டு அதனைக் காலநிலை மாற்றம், பசி, சமூகப் பாதுகாப்புப் போன்ற முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணப் பயன்படுத்துவது குறித்தும் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் ஆபத்துகளை எவ்வாறு குறைப்பது என்று உலக நாடுகள் பரிசீலித்து வரும் சூழலில், ஐ.நா.வின் இந்தக் கூட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2023இல் வெளியிடப்பெற்றது.